1981 பிப்ரவரி 28]

தால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கிறது. யாரோ குற்றம் செய்தார்கள் என்பதற்காக அந்தப் பகுதி கிராம வாசிகளுக்குத் தண்டனை கொடுப்பதுபோல் இருக்கிறது. அரசாங்கம் உடனடியாக போர்க்கால நடவடிக்கைபோல் இதற்கு முன்னுரிமை கொடுத்து இந்தச் சாலையைப் போட முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் சொன்ன பதிலைக் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன்.

திரு. இரா. முத்தையா: பொதுவாக மதுரை மாவட்டம் நெடுஞ்சாலைத் துறையில் உசிலம்பட்டி சப்-டிவிஷன் வந்தும் இந்த அளவுக்கு ரோடு மோசமாக இருக்கும் அந்தப் பகுதியில் எட்டாண்டு காலமாக அந்த ரோடு போடப்படாமல் இருக்கிறது. மராமத்து வேலை கூட செய்யப்படாமல் இருக்கிறது. குற்றப் பிரிவு துறையினர் இதற்கு அனுமதி வழங்காவிட்டாலும் இன்னின்ன தவறு நடந்திருக்கிறது என்று படம் எடுத்துக் கொண்டாவது மராமத்து வேலைகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அந்தச் சாலை இந்த ஆண்டிலேயே தேசிய கிராமப்புற அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும்.

மாவட்ட தலைமை மருத்துவமனை, இராமநாதபுரம்.

*வினா எண் 316—திரு. த. இராமசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரத்தில் உள்ள இராமநாதபுரம் மாவட்ட தலைமை மருத்துவ மனையில் மிக முக்கியமான ஊசி மருந்துகள் இல்லாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) புகார் ஏதும் வரவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[1981] பிப்ரவரி 28

திரு. த. இராமசாமி : இராமநாதபுரத்தில் இருக்கிற மாவட்ட மருத்துவ மனையில் டெட்டானஸ் வியாதிக்கு ஊசி மருந்து இல்லையென்று சொல்லுகிறார்கள். நாய் கடித்து வருகிறவர்களுக்கு ஊசி போட மருந்து இல்லையென்று சொல்லு கிறார்கள். இராமநாதபுரத்தில் இருக்கக்கூடிய அரசு மருத்துவ மனையில் பிரசவத்திற்காக வருகிற தாய்மார்களுக்கு பிரசவ வலி உண்டாக்க டிடோசின் ஊசி மருந்து இல்லையென்று கூறி வெளியே வாங்குகிற நிலைமைதான் இருக்கிறது. குழந்தை பிறந்த பிறகு இளம்பிள்ளை வாதம் வரக்கூடாது என்பதற் காகப் போடுகிற தடுப்பு மருந்து, போலியோ சொட்டு மருந்து இல்லையென்று சொல்லுகிறார்கள். அமைச்சர் அவர்கள் இதைப் போக்க நடவடிக்கை மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இந்த மருத்துவ மனையைப் பொறுத்தவரை 1977-78ஆம் ஆண்டில் 7,56,730 ரூபாய் மருந்துகளுக்காக செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1978-79-ல் எட்டு லட்சம் ரூபாய்; 1979-80-ல் ஒன்பது இலட்சம் ரூபாய்; 1980-81-ல் 10 லட்சம் ரூபாய் அந்தத் தலைமை மருத்துவ மனைக்கு மருந்துகளுக்காக மட்டும் செலவழிக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது எழுப்பியிருக்கக்கூடிய புகார்கள் பற்றி நல்ல வகையில் விசா ரித்து ஏதாவது தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். மருந்துகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மருந்துகள் விநியோகம் சரியாகச் செய்யவில்லை என்ற புகார் கூறப்பட் டிருக்கிறது. அப்படி இருக்குமானால் உரிய நடவடிக்கை எடுக் கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. த. இராமசாமி : நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அந்த அரசு மருத்துவ மனைக்கு ஏராளமான மருந்து களை வழங்கியிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். மிக்க மகிழ்ச்சி. சொல்லப்பட்ட மருந்துகள் மருத்துவ மனையில் இல்லையே தவிர டாக்டர்களின் கிளினிக்குகளில் தரப்படுகிறது. அவர் களுக்கு எப்படி இந்த மருந்துகள் கிடைக்கின்றன என்று கண்டு பிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அதைத்தான் நான் சொன்னேன். இப்போது உறுப்பினர்கள் இங்கே புகார் கூறியிருக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். விளம் பரம் தராமல் நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்போது விளம்பரம் கொடுத்துவிட்டோம். இருந்தாலும் அதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. க. அன்பழகன் : மருத்துவ மனைகளுக்கு மருந்துகள் வாங்குவதற்கு ஒதுக்கப்படுகிற நிதியின் அளவைத்தான் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள் என்று கருதுகிறேன்,

ஒதுக்கப்படுகிற நிதியில் ஏறத்தாழ 60 சதவிகிதம் 70 சதவிகிதம் அளவுக்குத்தான் மருந்துகள் போய்ச் சேருகின்றன. ஒதுக்கப்படுகிற நிதி அளவுக்கு மருந்துகள் போய்ச் சேருவதில்லை. இராமநாதபுரம் மாவட்ட மருத்துவ மனையில் மட்டுமல்ல, பல்வேறு மாவட்டத் தலைநகரங்களிலுள்ள மருத்துவ மனைகளிலும், மருத்துவக் கல்லூரிகள் உள்ள மருத்துவ மனைகளிலும் பெரும்பாலான நோயாளிகள் அவர்களுக்கு வேண்டிய மருந்துகளுக்கு— சாதாரண மருந்துகள் தவிர— வெளியே சென்று வாங்கும்படியான நிலைமைதான் இருக்கிறது. விபத்து ஏற்பட்டபோது கூட, அப்படி ஒரு கடுமையான நிலைமையில் கூட, சர்க்கரை ஆலையில் விபத்து ஏற்பட்டு உடல் வெந்து போனவர்களுக்குக் கூட வெளியே இருந்து மருந்து வாங்கவேண்டிய நிலைமை இருக்கிறது. இதற்கு மொத்தமாகவே ஒரு சூழ்நிலை காரணம் என்று கருதுகிறேன், மருந்துகள் கிடைக்கவில்லையென்று சொல்கிறார்கள்: வாங்கப்படுகிற மருந்துகள் தருவதிலே இருக்கின்ற குறைபாடுகளை நீக்கினால் தவிர இந்தக் குறையைப் போக்க முடியாது என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்கிறார்களா? தேவையான நடவடிக்கை அந்த வகையிலே எடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கள் எழுப்பியிருக்கிற வினாவிலே சொல்லப்பட்டதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை, முழுக்க முழுக்க அதிலே உண்மை இருக்கிறது. மருத்துவ மனைகளிலே இது ஒரு வியாதியாக தொடர்ந்து பல ஆண்டுகளாக இருந்துகொண்டிருக்கிறது, நான் முதலிலே கொடுத்து இருக்கின்ற புள்ளி விவரங்கள் amount spent on drugs எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிப்பது. இங்கே பேராசிரியர் அவர்களும், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தொகுதி உறுப்பினர் அவர்களும் எழுப்பியிருப்பதிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கின்ற மருந்துகள் சரியான முறையிலே செலவழிக்கப்படவில்லை என்று தெரிகிறது. என்னதான் நாம் கண்காணிப்புகள் செய்தாலும் சில நேரங்களிலே தவறுகள் நடக்கத்தான் செய்கின்றன: அதை ஒத்துக்கொள்ளாமல் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளத் தேவையில்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று சொன்னதைப் போல, நம்முடைய இலாகா மூலமாகவும், கண்காணிப்புத் துறையின் மூலமாகவும் அந்த நடவடிக்கைகளை விரிவுபடுத்த வேண்டுமென்பதில் சந்தேகம் இல்லை. அந்த வகையிலேதான் அதற்குரிய நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவர் அவர்களே, இராமநாதபுரத்திலே அரசாங்க மருத்துவ மனை தவிர வேறு வசதிகள் படைத்த தனியார் மருத்துவ மனைகள் கிடையாது. அனைத்து வசதிகள் படைத்த மருத்துவ மனைக்குச் செல்லவேண்டுமானால் இராமநாதபுரத்திலிருந்து 70 மைல்களுக்கு அப்பால் உள்ள

மதுரைக்குத்தான் வரவேண்டும். அனைத்து மருந்துகளும், மாத்திரைகளும் கிடைக்கக்கூடிய வகையிலே இராமநாதபுரம் அரசு மருத்துவமனையிலே நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு gentamycin, sepora போன்ற மிகப் பெரிய கிருமிகளை ஒழிக்கக்கூடிய மருந்துகளும் அந்த மருத்துவ மனைக்கு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: Gentamycin போன்ற மருந்துகளை எல்லா மருத்துவமனைகளுக்கும் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். Ampule ஒன்றின் விலை 10, 12 ரூபாய் என்ற அளவிலே நாம் செலவு செய்து வாங்கிக் கொடுக்கிறோம். அவைகள் எல்லாம் சரியான முறையிலே அங்கே போய்ச் சேரவேண்டுமென்று சொன்னார்கள், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக்கொண்டு வருகிறோம். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மிகவும் பின் தங்கிய மாவட்டமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மதுரை நகரம் மையமாக இருக்கிறது. இராமநாதபுரத்திலே, அங்கே உள்ள அரசு மருத்துவமனையைத் தவிர வேறு தனியார் மருத்துவமனைகள் இல்லை என்பது உண்மைதான். மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டபடி அதுபற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன்: இராமநாதபுரம் மாவட்டத்திலே உள்ள மருத்துவமனை மட்டுமல்ல, மதுரையிலே உள்ள மருத்துவ மனையிலே கூட ஆபரேஷன் செய்கிறபோது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு பூராவும் இருக்கலாம், மூலக்கேள்வி இராமநாதபுரம் மாவட்டம் பற்றியது அதைப்பற்றி மட்டும் கேட்கலாம். மதுரைக்கு வரவேண்டாம்.

திரு. உ. சுப்பிரமணியன்: ஆபரேஷன் செய்கிறபோது தேவையான வாய்வு இல்லாமல், டாக்டர்கள் அந்த ஆபரேஷனையே தள்ளிப்போட்டிருக்கின்ற அவலச் செய்தியை நான் இங்கே சொல்வதற்கு அனுமதி கொடுக்க வேண்டும். அங்கே வாய்வு, இண்டியன் ஆக்ஸிஜன் கம்பெனிதான் கொடுக்கிறார்கள். அந்த வாய்வு அங்கே கிடைக்காத நிலைமைபற்றி அரசுக்குத் தெரியுமா? அதைப் போக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: இண்டியன் ஆக்ஸிஜன், தேவையான அளவுக்கு, நாம் கேட்டிருக்கிற அளவுக்கு சப்ளை செய்யவில்லை என்பது உண்மைதான், ஆகவே general anaesth s a என்ற முறையிலே ஆபரேஷன் செய்கிறபோது maximisation of utilisation— தேவையான அளவு கொடுக்க வேண்டும் என்றும் முறையாக அதைச் செலவழிக்க வேண்டும்

1981 பிப்ரவரி 28]

என்றும் எங்கே தேவைப்படுகிறதோ அங்கே மட்டும் செலவழிக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறோம். அந்த வகையிலே கிடைக்கக்கூடியதை வைத்து முறையாகப் பயன்படுத்த வேண்டு மென்று சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதி யுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

[முற்பகல் 10–00]

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, இராம நாதபுரம் மருத்துவமனை பற்றிய கேள்விகளுக்கு இராமநாதபுரத் தைச் சேர்ந்தவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதைப் பற்றி நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் பிற்பட்ட மாவட்டத்திலே இருக் கிறோம் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களே ஒத்துக்கொண் டார்கள், துரதிருஷ்டவசமாக தொடர்ச்சியாக, நீண்ட நாட்க ளாக எங்கள் மாவட்டத் தலைமையிடம் மதுரையில் இருக்கிறது, எனவே, இராமநாதபுரத்தில் உள்ள ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ் பத்திரி தாயில்லாப் பிள்ளை மாதிரி இருக்கிறது. அதன் விளை வாக அங்கே சரியாக மருந்துகள் கிடைப்பதில்லை. நாங்கள் ட்ரீட்மென்ட் செய்து கொள்வதற்கு அந்த ஆஸ்பத்திரிக்குப் போவதே இல்லை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கேள்வி நேரம், உறுப்பினரவர்கள் வேண்டுகோள் விட்டுக்கொண்டிருக்கிறார்கள், உறுப்பினரவர்கள் ஏன் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும்? அவர்கள் நன்றாகத்தானே இருக்கிறார்கள். (சிரிப்பு).

திரு. செ. சிவசாமி: ஆகவே, மதுரைக்குப் போனால்கூட மதுரை ஆஸ்பத்திரியில் இருந்து மருந்துகள் வெளியே போகின்றன. இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதால் இராமநாதபுரம் ஆஸ் பத்திரியிலேயே நல்ல முறையிலே மருந்துகளை சப்ளை செய்து நாங்கள் அங்கேயே ட்ரீட்மென்ட் எடுத்துக்கொள்வதற்கு ஏற் பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இங்கே கொடுத்திருக்கக்கூடிய புள்ளி விவரத்தை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் நன்றாகக் கவ னித்திருப்பார்களேயானால் தெரிந்திருக்கும். பத்து இலட்சம் ரூபாய் சென்ற ஆண்டு ஒரு மாவட்டத் தலைமை மருத்துவ மனைக்கு—டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால், மற்ற மாவட்ட மருத்துவ மனைகளைப் பார்க்கவில்லை—இன்னும் நான்கைந்து மாவட்ட மருத்துவமனைகளைவிட அது ஜாஸ்தியாகக் கொடுக்கப்பட்டிருக் கிறது. 500 பெட் இருந்தாலும் ஏறத்தாழ 600 படுக்கைகள்—

நோயாளிகள் இன்பேஷியன்ட்ஸ் ஆக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் அதைப் பார்த்திருக்கிறேன். நல்ல மாவட்ட மருத்துவமனை, அருமையான மருத்துவமனை, புதுக் கட்டடங்களெல்லாம் இருக்கின்றன. இன்னுமகூட நல்ல முறையில் செய்யலாம். ஏனென்றால், ஆண்டுதோறும் நம்முடைய பணிகளைக் கூர்மைப் படுத்த வேண்டுமென்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. இன்னும் அங்கத்தினரின் எண்ணங்களை, உணர்வுகளை நான் மனதிற்கொண்டு இன்னும் நல்ல வகையில் கண்காணிக்க, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கக்கூடிய உணர்வுகளைப் பரிமளிக்கக்கூடிய அளவிற்கு எல்லா வகையான ஏற்பாடுகளையும் செய்வோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவரவர்களே, முக்கியமான ஊசி மருந்து இல்லாமல் இருப்பது பற்றிதான் பிரச்னை. இராமநாதபுரம் மாவட்டத்திலேயும் இன்னும் ஏனைய மாவட்டங்களிலேயும் தமிழகத்திலே மூளைக் காய்ச்சல் வியாதி பரவிக்கொண்டிருக்கிறது. அதற்கான மருந்துகள் தமிழகத்திலே சப்ளை செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலே ஏ.டீ.எஸ். கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். இதுபோல பல ஆஸ்பத்திரிகளில் பல ஊசி மருந்துகள் கிடைப்பதில்லை. அரசாங்கம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் அவர்கள் அதைத்தான் கேட்டார்கள். எனவே, மற்றவர்கள் என்ன கேள்விகளைக் கேட்டார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு கேள்வி கேட்க வேண்டும்.

டாக்டர் கே. சௌரிராஜன் : லைப் சேவிங்ஸ் டிரக்ஸ் என்று ஒரு பட்டியலை அரசாங்கம் தயாரித்து அந்தப் பட்டியலை ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவமனையிலும் வைக்க வேண்டுமென்று அரசு உத்திரவிடுமா? இதை பேராசிரியர் கேட்கவில்லை.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்களுக்கு நான் நன்றி செலுத்த வேண்டும். ஏனென்றால் இது அருமையான கேள்வி. இதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. அதைச் சொல்வதற்கு வாய்ப்பளித்திருக்கிறார்கள் என்பதற்காக நன்றி.